# பொய்யா? மெய்யா?

## சுபாஷ் போஸ் கடிதமாம்.

### ஹிந்தி எதிர்ப்புக் காரியதரிசி பதிலாம்!

சென்னை, ஜூ. 3.

சென்னையில் நடக்கும் ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் முழு விவரங்களையும், அதைச் சார்ந்த பிரசுரங்களையும் தனக்கு அனுப்பிவைக்கு மாறு 26-5-38ந் தேதியிட்டு ஹிந்தி எதிர்ப்புக் கமிட்டிக் காரியதரிசிக்கு ராஷ்டிரபதி ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்.

கமிட்டியின் காரியதரிசி நேற்று பதில் எழுதி அனுப்பினார்.

அந்த பதிலில் கட்டாய ஹிந்திக் கல்வி என்ற பிரச்னை தென்னிந்திய மக்களுக்கு உண்டாக்கியிருக்கும் மனத்தாங்கலைப் போல எந்த பிரச்னையும் அவ்வளவுமனத்தாங்கலைக் கொடுக்கவில்லை என்றும்,

இம் மாகாணத்திலுள்ள ஜனங்களில் பெரும் பாலோர் கட்டாய ஹிந்தக் கல்வியை வெறுக்கின்றார்கள் என்றும் சென்னை பிரதம மந்திரி பிடிவாதமாக விருந்தால் அது தவறென்றும்,

இந்தப் பிரச்சினை விஷயமாக இருதரத்தாரும் ஆலோசனை செய்யவேண்டுமென்றும்,

அதற்காக கமிட்டியார் தோழர் சுபாஷசந்திர போஸை சென்னைக்கு வரும்படி அழைப்பதாகவும்,

பின்னும் இந்த விஷயம்ஆலோசிக்கப்படும் வரையில் ஒரு நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளாமலிருக்கும்படி தோழர் போஸ் சென்னை பிரதம மந்திரிக்கு ஆக்ஞையிட வேண்டுமென்றும்,

அப்படியில்லாமல் பிடிவாதம் செய்தால் அதனால் காங்கரஸ் மந்திரிகளுக்கு அபக்யாதி ஏற்படுமென்றும்சொல்லிக்கூறப்பட்டிருக்கின்றன.

தவிர பள்ளிக்கூடங்கள்முன் மறியல் செய்யவும் சுமார் 1000 தொண்டர்கள் சேர்ந்திருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அடுத்த ஞாயிற்றுக் கிழமையன்று சென்னை ஹைகோர்ட்டுக் கடற்கரையில் ஒரு மாபெருங் கூட்டம் சர். கூர்மா வெங்கட ரெட்டியாரின் தலைமையில் நடைபெற ஏற்பாடு நடந்து வருகிறது. (சுதேசமித்திரன்.)

குறிப்பு.

"ஹிந்து" விலும் இதுபோன்ற ஒரு செய்தி வெளி வந்திருக்கிறது. ஆனால் ஹிநதி எதிர்ப்புக் கமிட்டிக் காரியதரிசியிடமிருந்து இச்செய்தியைப்பற்றிய தகவல் நமக்குக் கிடைக்கவில்லை. இது மெய்யா? அல்லது தமிழர்களுக்கு பொய் நம்பிக்கையூட்டி ஹிந்தி எதிர்ப்புக்கிளர்ச்சியின் வன்மையைக் குறைக்கும் சூழ்ச்சியா? எல்லாம் போகப்போகத் தெரியும்.

ஆசிரியர்